Inithi’s World of Kavithaigal

thelifeofmine3.wordpress.com/2024/12/03/inithis-world-of-kavithaigal/

December 3, 2024

தனிமையின் நினைவுகள்

இருளின் தன்மையில் வாழ பழகிய எனக்கோ உங்கள் பெருவெளிச்சம் கண்ணை விழிக்க விடாமல் செய்கிறது.கொஞ்சம் பொறுத்திருங்கள் எனக்கு பெருவெளிச்சம் பழக சில நாட்கள் ஆகலாம்…

யாருமற்ற ஒரு சூழ்நிலையை நன்கு பழகிய பிறகு யாரின் அன்பையும் நான் எதிர்பார்க்க வில்லை.இப்போதெல்லாம் ஓரிரு முறை அலைபேசி ஒலித்துக் கொண்டிருக்கிறது அதை எடுத்து பதில் கூற மனமில்லாமல் அப்படியே விட்டுவிடுகிறேன்.மீண்டும் ஒருமுறை என்னால் யாருமற்ற சூழ்நிலையை அனுபவிக்க இயலாது.

தனிமையின் இனிமைகள்

யாருமற்ற தனிமையென்பது அவ்வளவு எளிதில் யாருக்கும் கிடைக்காத வரம்…

நான் நானாக இருப்பதற்கு இந்த தனிமை தேவைப்படுகிறது.

வாழ்க்கை

கிடைக்காதவைகளே அதிகம் பேசப்படுகிறது எழுதப்படுகிறது...

வாழ்க்கைமுறையை மாற்றினால் போதும் வாழ்வு மாறிவிடும்...

சிலரால் ஏற்றுக்கொள்ள இயலாத வாழ்வை சிலர் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

வாழ்க்கை கதையாக மாறுவதுபோல கதைகள் வாழ்க்கையாக மாறாது.

யாரோ சிலருக்கு இவ்வுலகம் வண்ணமயமாக தோன்றியிருக்கலாம், அவர்கள் ஏற்படுத்தின தாக்கம் இவ்வுலகம் எல்லோருக்கும் அழகானது என்று எல்லோரையும் நம்ப வைத்திருக்கிறது.

சற்று நேரத்திற்கு முன்பு சிலர் முன் வாழ தகுதியற்ற நபராக மாறினேன்.அந்த சற்று நேரம் வராமலே இருந்திருக்கலாம்,பிறகு எப்படியோ நிலைமையை சரி செய்து கொண்டேன்.இன்னும் எத்தனை தகுதியற்ற சூழ்நிலைகளை எதிர் கொள்வது.

பாரம் ஆக என்னுதல்

ஒருசில நன்றிக் கடன்களை சுமந்து கொண்டிருக்கும் எனக்கு கடனற்ற வாழ்வு கேள்விக் குறிதான்.

எதற்காக இந்த மௌனம் பல நேரங்களில்பேச விடாமல் ஆட்கொள்கிறது. நான் உங்களை சார்ந்திருக்கிறேன் என்பதற்காகவா..

ஆசைகள்

இளவயதின் இயல்பானவைகள் காலப்போக்கில் பேராசையாக இருக்கின்றது.

எத்தனையோ கனவுகள் இருக்கிறது என்னிடம் அதில் ஒன்று நிறைவேறினாலும் ஒட்டுமொத்தமாக நிறைவேறியதற்கு சமம்.

புத்தகம் மற்றும் வாழ்க்கை

முற்றிலும் பிழையான புத்தகத்தில் முதல் வரியான பிறப்பும்.இறுதி வாரியான இறப்பு மட்டும் பிழையின்றி எழுதப் பட்டிருக்கிறது.

கிறுக்கல்களற்ற சில பக்கங்கள் போதும் இந்த வாழ்வை அழகாக்குவதற்கு.

புத்தகத்தின் வழியேயாரோ ஒருவர் வாழ்ந்த கதை என்னிலும் சில காலம் உயிர் வாழ்ந்தது.

வாழ்க்கையும் வழியும்

எதையும் அதிகமாக தெரிந்து கொண்டால் காலம் அதை ஒருநாள் மறக்கும் நிலைக்கு கொண்டு செல்லும்.

விடியலற்ற ஒரு நாள் வாய்க்குமெனில் இங்கு பல கண்ணீர்கள் துடைக்கப்படாமலே நீண்டு கொண்டிருக்கும்.

எளிமையாக இருப்பதாக காட்டிக்கொள்வதற்கும் இங்கு பணம் அவசியம்.

சிறுக சிறுக சேமிப்பவைகளே பொக்கிஷங்கள். இப்போது சேமிக்கிறேன் என்றோ ஒருநாள் பொக்கிஷமாவதற்கு.

காதல்

ஒரு அன்பின் புரிதல் என்ன செய்யும் வாழ்வின் அத்தனை கஷ்டத்தையும் தானும் சுமக்கும்.

எந்நேரமும் என் நினைவில் ஓடிக்கொண்டிருக்கும் என் பிடித்த பாடல் நீ.